www.Padasalai.Net www.TrbTnpsc.com

| ⊙ | 8 | 1 | 0 | 1 | ⊙ |
|---|---|---|---|---|---|

வகுப்பு : 8

# மூன்றாம் இடைப் பருவத் தேர்வு - 2025

## தமிழ்

நேரம் : 1.30 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 50

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 7X1=7

1. அயோத்திதாசர் நடத்திய இதழ் ----------
   (அ) ஒருபைசாத் தமிழன் (ஆ) காலணாத் தமிழன்
   (இ) அரைப்பைசாத் தமிழன் (ஈ) அரையணாத் தமிழன்
2. அறநெறியில் வாழ்பவர்கள் உயிரைக் கவர வரும் -------க் கண்டு அஞ்ச மாட்டார்கள்.
   (அ) புலனை (ஆ) அறனை (இ) நமனை (ஈ) பலனை
3. கவலைகள் -------- அல்ல.
   (அ) சுமைகள் (ஆ) துன்பங்கள்
   (இ) சுவைகள் (ஈ) கைக்குழந்தைகள்
4. அடி எத்தனை வகைப்படும்?
   (அ) இரண்டு (ஆ) நான்கு (இ) எட்டு (ஈ) ஐந்து
5. பெருஞ்செல்வம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.
   (அ) பெரிய + செல்வம் (ஆ) பெருஞ் + செல்வம்
   (இ) பெரு + செல்வம் (ஈ) பெருமை + செல்வம்

கோடிட்ட இடங்களை நிரப்புக.

6. இந்தியாவின் முதல் சட்ட அமைச்சர் அம்பேத்கர்
7. மக்களின் ஒழுக்கத்தோடு தொடர்புடையது ---------

II. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி. 5x2=10

8. பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?
9. மனிதனின் மனம் கலங்கக் காரணமாக அமைவது யாது?
10. ஒரு சிறந்த வழிகாட்டி எவ்வாறு இருக்க வேண்டும் என அயோத்திதாசர் கூறுகிறார்?
11. தோல்வி எப்போது தூண்டுகோலாகும்?
12. எது பெருமையைத் தரும்?
13. கலைச் சொல் தருக : அ) Agreement ஆ) Philosophy
14. கன்னிப்பாவை கூறும் பண்புகளுள் நற்பண்புகள் சிலவற்றை எழுதுக.

III. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி: 2x4=8

15. அரசியல் விடுதலை குறித்த அயோத்திதாசரின் கருத்துகளை எழுதுக.
16. வேற்றுமை அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.



Scanned with CamScanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

17. குணங்குடியார் பராபரத்திடம் வேண்டுவன யாவை?

18. பூமி எப்போது பாதையாகும்?

IV. அடிபிறழாமல் எழுதுக. 3+2=5

19. "படமாடக் கோயில்......" எனத் தொடங்கும் ஒன்றே குலம் பாடல்.

20. 'தொடர்பு' என முடியும் திருக்குறள்.

V. அனைத்து வினாக்களுக்கும் விடையளி: 4x2=8

21. கோடிட்ட இடங்களைப் பொருத்தமான சொற்களால் நிரப்புக.

அ) சிறுமி ------ (தனது / தமது) கையில் மலர்களை வைத்திருந்தாள்.

ஆ) இவை ------( தான் / தாம்) எனக்குப் பிடித்த நூல்கள்.

22. இரண்டு தொடர்களை ஒரே தொடராக்குக.

அ) எனக்குப் பால் வேண்டும். எனக்குப் பழம் வேண்டும்.

ஆ) மழை நன்கு பெய்தது. எங்களால் விளையாட முடியவில்லை.

23. சமுதாயம் மேம்பட உனது பொறுப்புகள் எவையேனும் இரண்டினை எழுதுக.

24. பின்வரும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

சாலை விதிகளுக்கு உட்பட்டு வாகனம் ஓட்டும் முறைகளை அறிந்து வாகனங்களை இயக்கினால் விபத்துகளைத் தவிர்க்கலாம். ஓட்டுநர் வாகனத்தைச் சாலையின் இடப்புறத்தில் செலுத்துவதுடன், எதிரே வரும் வாகனத்திற்கு வலப்புறமாகக் கடந்து செல்லப் போதிய இடம் விட வேண்டும். தீயணைப்பு வாகனம், அவசரச் சிகிச்சை ஊர்தி ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளித்து, அவை தடையின்றிச் செல்வதற்குக் கண்டிப்பாக வழிவிட வேண்டும். எல்லா ஓட்டுநர்களும் தேவையான இடங்களில், கை சைகை அல்லது வாகன எச்சரிக்கை விளக்குகளைத் தவறாமல் பயன்படுத்த வேண்டும்.

அ) கண்டிப்பாக வழிவிட வேண்டிய வாகனங்கள் எவை?

ஆ) விபத்துகளை எவ்வாறு தவிர்க்கலாம்?

VI. அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 2x6=12

25. அ) குழந்தை கிருஷ்ணாவின் பண்பு நலன்களை "பால் மனம்" கதையின் வாயிலாகத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) வாழும் முறை, சமத்துவம் ஆகியன பற்றிய அயோத்திதாசரின் சிந்தனைகளைத் தொகுத்து எழுதுக.

26. அ) "உழைப்பே உயர்வு" என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

(அல்லது)

ஆ) புத்தகம் வாங்கி அனுப்புமாறு உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.



Scanned with CamScanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com